1979 பிப்ரவரி 26] [திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி]

புழலேரி பகுதியில் நாரவாரிக்குப்பம், கொடுங்காயூர், ஆண்டியார்குப்பம் ஆகிய மூன்று கூட்டுறவு விவசாயக் கடன் சங்கங்கள் உள்ளன. இந்த மூன்று சங்கங்களில் நாரவாரிக்குப்பம் கூட்டுறவு விவசாயக் கடன் சங்கம் மட்டுமே (7 பெரிய விவசாயிகளுக்கும் 15 சிறு விவசாயிகளுக்கும் சேர்ந்து) மொத்தம் 22 உறுப்பினர்களுக்கு அறுபத்தி நான்காயிரம் ரூபாய் கடன் வழங்கியுள்ளது. இக்கடன்களைத் திரும்பச் செலுத்தும் கெடுநாள் 28—2—1979 ஆகும். இந்தப் பகுதியில் சராசரி மகசூல் ஆறு அணா அல்லது அதற்கும் குறைவாக உள்ளது என்று விகிதாச்சார விளைவு அடிப்படையில் சான்றிதழ்கள் வருவாய்த்துறை அதிகாரிகளால் வழங்கப்படவில்லை. இருப்பினும் காஞ்சிபுரம் மத்திய கூட்டுறவு வங்கி வருவாய்த் துறை அதிகாரிகள் மூலம் நாரவாரிக்குப்பம் கூட்டுறவு விவசாயக் கடன் சங்கத்தில் கடன் விளைவிக்கப்பெற்ற பயிர்கள் எந்த அளவுக்குப் பாதிக்கப்பட்டுள்ளது என்று அறியத்தக்க நடவடிக்கை எடுத்து வருகின்றது. வருவாய்த்துறை அதிகாரிகள் சராசரி மகசூல் ஆறு அணா அல்லது அதற்கும் குறைவாக உள்ளது என்று சான்றிதழ்கள் வழங்கினால் அதனடிப்படையில் குறுகியக் காலக் கடன்களை மத்திய காலக் கடன்களாக மாற்ற தக்க நடவடிக்கை எடுக்கப் பெறும்.

(ஆ) காவிரி நதி நீர் பங்கீட்டுப் பிரச்னையில் தஞ்சாவூர் பகுதிகளில் எழுந்துள்ள பதட்ட நிலைமை குறித்து.

திரு. துரை கோவிந்தராசன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ''காவிரி நதி நீர் பங்கீட்டுப் பிரச்சினையில் நடந்த பேச்சுவார்த்தைகள் சுமுகமாக முடியாததற்கு தமிழ்நாடு அரசு தான் காரணம் என்று கேரள நீர்ப்பாசன அமைச்சர் கேரள சட்டமன்றத்தில் அறிவிப்பு செய்ததாகக் கூறப்படும் காரணத்தால், தஞ்சாவூர் பகுதிகளில் எழுந்துள்ள பதட்ட நிலை குறித்து'' நான் 41-வது விதியின் கீழ் கொடுத்துள்ள அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை, மாண்புமிகு வேளாண்மை மற்றும் பாசனத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

[முற்பகல் 11-00]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: துணைத் தலைவர் அவர்களே, பிப்ரவரி திங்கள் 23-ம் நாள் ''இந்து'' பத்திரிக்கையில் வந்த செய்தி ஒன்று என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. அதில் கேரள மாநில அரசின் தொழிலாளர் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்

[திரு. ப. குழந்தைவேலு] [1979 பிப்ரவரி 26

அவர்கள் 22—2—1979அன்று கேரள சட்டமன்றப் பேரவையில், தமிழ்நாடு அரசு 1976-ல் தமிழ்நாடு, கேரள, கருநாடக மாநிலங்களுக்கிடையே காவிரிப் பிரச்சினையில் ஏற்பட்ட உடன்பாட்டினை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டதாகக் கூறியதாக குறிப்பிடப் பட்டிருக்கிறது. நான் உண்மை நிலையைக் கீழ்க்கண்டவாறு குறிப்பிட விரும்புகிறேன் :—

1976ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 25, 26-ம் நாள், மத்திய விவசாய மற்றும் பாசன அமைச்சர் அவர்கள் முன்னிலையில் மாநிலங்களுக்கிடையே காவிரி பிரச்னைபற்றி பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன. அப்பொழுது தமிழ்நாடு, குடியரசுத் தலைவரின் ஆட்சியின் கீழ் இருந்தது. அப்போதைய ஆளுநர் தமிழ்நாட்டின் சார்பாக பேச்சு வார்த்தைகளில் கலந்து கொண்டார். பின்னர், மத்திய விவசாய அமைச்சரிடமிருந்து ''கருநாடக, கேரள, தமிழக மாநிலங்களால் ஒப்புக் கொள்ளப் பட்டு முடிவு பெற்ற உடன்படிக்கை'' என்று குறிப்பிட்ட வரைவு அடங்கிய கடிதம் ஒன்று, அப்போதைய ஆளுநருக்கு வந்தது. பேச்சு வார்த்தைகளில் கலந்து கொண்டவர்கள் எவராலும் இந்த அறிக்கையில் கையொப்பமிடப்படவில்லை. அப்போதைய தமிழ்நாடு ஆளுநரே இப்படிப்பட்ட ஒப்பந்தத்தில் கையொப்ப மிடுவதில் கருத்துவேற்றுமை கொண்டிருந்ததாகத்தெரியவருகிறது.

2. தமிழ்நாடு, மத்திய அரசை காவிரி நீர்ப் பிரச்சினையில் தீர்வு காண, ''நடுவர் குழு'' ஒன்று நிறுவும்படி 1971-ல் வற்புறுத்தி வந்துள்ளது என்பதை இந்த அவையின் கவனத்திற்கு இச்சமயத்தில் கொண்டுவர கடமைப்பட்டுள்ளேன். அப்பொழுது முன்னாள் பிரதம அமைச்சர், ''மைசூரில் மக்களாட்சி இல்லாதபோது மைசூர் அரசைக் கட்டுப்படுத்தும் எந்த நடவடிக்கை எடுப்பதும் உசிதமல்ல'' என்று அப்போதைய தமிழ்நாடு முதலமைச்சருக்கு எழுதியிருந்தார். மேலும் 1971-ல் உச்ச நீதி மன்றத்தில் இப்பிரச்னை குறித்த வழக்கில் தாக்கல் செய்த எழுத்து மூல வாக்குமூலத்தில் மத்திய அரசு கீழ்க் கண்டவாறு குறிப்பிட்டிருந்தது.

நீர்ப் பங்கீட்டுப் பிரச்சினைகள் ''இந்திய அரசியல் சட்ட 262-விதிக்குட்பட்டும், சட்டத்திற்கு அதாவது மாநிலங்களுக் கிடையேயான நீர்ப்பங்கீட்டுப் பிரச்சினைகள் சட்டம், 1956 (Inter-State Water Disputes Act, 1956)-ன் படியும் பாராளுமன்ற ஜனநாயக முறையில் அரசியலமைப்புச் சட்டப்படி அமைக்கப் பட்ட மாநில அரசுக்களுக்கிடையே, பேச்சு வார்த்தைகள் மூலமே தீர்த்துக்கொள்ளப்பட வேண்டுமென்றும், அவ்விதப் பேச்சு வார்த்தைகள் இந்திய அரசியல் சட்டம் 356-ஆவது விதியின்கீழ் ஆட்சிக்குட்பட்ட மாநிலங்களுக்கிடையே நடத்தக்

கூடாது, நடத்தவும் முடியாது என்று கூறப்பட்டது. கருநாடக அரசு உச்ச நீதி மன்றத்தில் அப்பொழுது தாக்கல் செய்த தங்களது எழுத்துமூல வாக்குமூலத்திலும் மேற்கண்ட கருத்தையே கொண்டிருந்தது. எனவே, மத்திய அரசும், கருநாடக அரசும் கொண்டிருந்த கருத்தின் அடிப்படையில் எடுத்துக்கொண்டாலும், குடியரசுத் தலைவரின் ஆட்சியில் இந்த மாநிலம் இருந்தபோது இது போன்ற பிரச்சினையில் தமிழ்நாடு அரசை உடன்படிக்கைக்கு உட்படுத்துவது முறையாகாது.

3. இந்த அரசு, 24-12-1977-ல் நமது முதலமைச்சர் அவர்களால் மத்திய விவசாய மற்றும் பாசன அமைச்சருக்கு எழுதிய கடிதத்தின் மூலம் மத்திய அரசுக்கு இவ்விவரங்கள் தெரியப்படுத்தப்பட்டுள்ளன. பின்னர் 5-8-1978, 3-9-1978 ஆகிய தேதிகளில் டில்லியிலும் 9-10-1978-ல் பெங்களூரிலும் முதலமைச்சர்கள் மட்டத்தில் நடந்த பேச்சு வார்த்தைகளில் காவிரி நீர் பங்கீடு முறைகளைப் பற்றிய ஓர் உடன்படிக்கை 1976 ஆகஸ்டில் இருந்தது என்று கூறுவது சரியானதல்ல என்று, இக்கருத்துக்களின் அடிப்படையில் நமது முதலமைச்சர் வலியுறுத்தியிருக்கிறார்.

1. தகவல் கோரல் — தொடர்ச்சி.

(ஏ) டெல்லியில் பிரதமருக்கும் மற்றவர்களுக்கும் விவசாயம் சம்பந்தமாக முதலமைச்சர்கள் அளித்த மகஜர் குறித்து—

திரு. சோ. அழகர்சாமி: பாயின்ட் ஆப் ஆர்டர். பத்திரிகைகளில் முக்கியமான ஒரு செய்தி வந்திருக்கிறது. நம்முடைய முதலமைச்சர் அவர்கள் விவசாய சம்மந்தமான விஷயங்கள் பற்றியும் மற்ற விஷயங்கள் பற்றியும் விவாதிப்பதற்காக டில்லி சென்று வந்திருக்கிறார்கள். விவசாயம் சம்பந்தமாக 12 முதலமைச்சர்கள் கையெழுத்திட்டு பிரதமர், துணைப் பிரதமர், விவசாயத் துறை அமைச்சர் ஆகியவர்களிடம் ஒரு மகஜர் கொடுத்திருக்கிறார்கள். விவசாயிகளுக்குக் கொடுக்கக் கூடிய கடனுக்கு, விவசாயிகளுக்குக் கொடுக்கக்கூடிய கடனுக்கான வட்டியை 11 சத விகிதத்திலிருந்து 6 சதவிகிதமாக்க் குறைக்க வேண்டும், நலிந்த ஆலைகளுக்குக் கொடுக்கப்படும் சலுகைகள் போல் கடனைத் திருப்பிச் செலுத்த முடியாத விவசாயிகளுக்கும்